## ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு I - 2020

ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு I இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 23 ஆம் திகதிய 8878-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் சுகாதார அமைச்சானது முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சாகவிருந்த தற்போதைய அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டமானது கூறு I மற்றும் கூறு II ஆக பிரிக்கப்பட்டுள்ளதுடன் கூறு I மத்திய மட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் அமுல்படுத்தப்படுகின்றது. நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உயர் ஆபத்தைக் கொண்ட சனத்தொகை குழுக்களில் உள்ள தொற்றா நோய்களை கண்டறிந்து முகாமை செய்வது தொடர்பான வலியுறுத்தலுடன் கூடிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 31,588 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆகும். அதில் ரூபா 8,030.46 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50.845 மில்லியன் செயற்திட்டத்தின் கூறு – I இற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் மொத்த கிரயம் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 சனவரி 23 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த செலவினங்களையும் அதன் ஒருங்கிணைந்த காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களைஇலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | | |
| (அ) | திறைசேரி செயற்பாடுகள் திணைக்கள அறிக்கைகளின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்கு நிதியளித்தல் முகவர் ரூபா 9,851 மில்லியனை வழங்கியுள்ளது. அதில் ரூபா 4,317 மில்லியன் மாத்திரமே கூறு - 1 இற்காக விடுவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ரூபா 4,169 மில்லியன் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீதமுள்ள ரூபா 5,534 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், திறைசேரியால் விடுவிக்கப்பட்ட தொகைக்கும் செயற்திட்டத்தினால் பெறப்பட்ட தொகைக்கும் இடைப்பட்ட ரூபா 231 மில்லியன் வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 5,534 | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிற துடன் ERD மற்றும் செயற்திட்ட அலுவலகத்தால் பராமரிக்கப்படும் பதிவேடுகளுக்கு இடையே கணக்கிணக்கம் செய்து வேறுபாட்டைக் இனங்காண்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட அனைத்து நிதிகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கைகளின் பிரகாரம் 2019 இல் கடன் வழங்கும் முகவரால் விதிக்கப்பட்ட முன் இறுதிக் கட்டணம் (Front End Fee) நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 88.91 | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. | அனைத்து செலவினங்களும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி மீதியை உறுதிப்படுத்தவதற்கான ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 52.28 | அவதானிப்புடன் இணங்கப்பட்டதுடன் உறுதிப்படுத்தல் கடிதங்களை கணக்காய்விற்கு விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உறுதிப்படுத்தல் கடிதங்கள் நேரடியாக கணக்காய்வாளர்களிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் மற்றும் மாகாண மட்டத்திலான சிவில் வேலைகளுக்கான விரிவான பட்டியல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2,983.38 | 2021 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களுடன் மாகாண ரீதியிலான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படும். | விரிவான பட்டியல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்களின் நி.பி 626 | ஆண்டு கணக்கைத் தயாரிப்பதற்கு வசதியாக இரட்டை பதிவு அடிப்படையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். எனினும், அவ் இரட்டை பதிவு தேவைப்பாடுகள் செயற்திட்டத்தின் மாகாண மற்றும் மத்திய மட்டத்தால் பேணப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து இரட்டை பதிவு அடிப்படையிலான கணக்கீட்டு முறையை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2016 யூன் 10 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை மற்றும் 2018 யூன் 04 ஆம் திகதிய செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 64 ஆம் பந்தி | செயற்திட்டத்திற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சபைகளின் உள்ளக கணக்காய்வு பிரிவுகளால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரம் கிடைத்தவுடன், உள்ளக கணக்காய்வாளரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை செயற்திட்டம் எடுத்துள்ளது. இராஜாங்க அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் சுகாதார அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவுகளுடன் | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இணைந்து புதிய உள்ளக கணக்காய்வாளர் கணக்காய்வை ஆரம்பித்துள்ளார். | |
| (இ) | 2017 யூன் 28 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை | நிலையான சொத்துகள் பதிவேடு மாகாண அலுவலகங்கள் மற்றும் செயற்திட்ட அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண ரீதியாக, நிலையான சொத்துப் பதிவேடுகள் தற்போது பேணப்பட்டு வருகிறதுடன், சுகாதார அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களுக்கும் நிலையான சொத்துப் பதிவேடுகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

**3.1 பௌதீக செயலாற்றல்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்காக நிறுவப்பட்ட 04 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளில் (DLI) 2020 திசெம்பர் 31 அளவில் அடைந்து கொள்ளப்பட்ட பௌதீக முன்னேற்றம் 40.16 சதவீதமாக இருந்தது. இதனால், செயற்திட்ட காலப்பகுதியின் போது செயற்திட்டத்தின் விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வது கடினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 தொற்றுநோய் தொடங்கியதன் காரணமாக, 2020 ஆம் ஆண்டிற்கான சரிபார்ப்பு திகதி 2021 யூன் 30 வரை நீடிக்கப்பட்டது, இதன் மூலம் பல DLI அடைந்துகொள்ளப்பட்டன, இதனால் நிதி வழங்கல் வெற்றிகரமாக காணப்பட்டது. | செயற்திட்டத்தை திட்டமிட்டவாறு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் கூறு 1 இன் கீழான சுமார் 70 சதவீத ஒதக்கீடு மாகாண சுகாதார சேவைக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 94.13 மில்லியன் தொகை மாகாண சுகாதார சேவைகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. | ஏனைய நடவடிக்கைகள் மாகாண நிறுவனங்களில் இடம்பெற்றுன்ளன, கண்காணித்து ஒழுங்குபடுத்தும் பொறுப்பு சுகாதார அமைச்சின் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் மேலதிக செயலாளர்களின் | மாகாண மட்ட மற்றும் மத்திய மட்ட செயற்பாடுகள் தெளிவாக இனங்காணப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பொறுப்பாகும். எனவே, அவர்களின் முன்னோட்டத்தின் கீழ் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்காக அவர்கள் பயன்படுத்தியுள்ளனர். | |
| (இ) | செயற்திட்டத்தின் மத்திய மட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான முறையான திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நிதிகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, சுகாதாரத் துறையில் உள்ள பல்வேறு நிறுவனங்கள், துறைகள் மற்றும் தனிநபர்களுக்கு ரூபா 217.2 மில்லியன் தொகை வழங்கப்பட்டு அவர்களின் சொந்த முன்னுரிமைகளுக்காக பணம் செலவிடப்பட்டிருந்தது. | தேசிய தர மேம்பாட்டு நடவடிக்கைகளாக சுகாதார அமைச்சினால் அமுல்ப்படுத்தப்படும் நடவடிக்கைகள், மத்திய அல்லது மாகாண நிறுவனங்களாக இருந்தாலும் பிரதானமாக அமுல்ப்படுத்தப்படுகின்றன. எனவே கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ள முடியாததால் ரூபா 22,614,681 தொகையான அனைத்து செலவினங்களும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துடன் தொடர்புடையவையாகும். | செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு குறித்துரைக்கப்பட்ட திட்டமொன்றின் பிரகாரம் செலவிடப்பட வேண்டும். |

**3.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான கூறு 1 இன் மத்திய மட்டத்திற்கான நிதிக்கூற்று மற்றும் கூறு 1 இன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2021 ஒக்தோபர் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |